Tamilmanam – International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 3049-0723
pISSN:3107-7781

தமிழ்மணம்
Peer-reviewed · Open access · Google Scholar · Crossref DOI
SJIF Impact Factor 3.5 · Monthly
Vol. 12, No. 06 (2026) p572 TIRJTS-2026-0050
DOI: 10.63300/tamilmanam.v12i06.32

UGC Approved by Transparent Peer Review

RESEARCH ARTICLE

சங்க கால மன்னர் பெயர்களில் ‘தியன்’ என்னும் சொல்: சொல்லமைப்பும் வரலாற்றுப் பின்னணியும்

“The work ‘Thiyan’ in the Names Of Sangam Age Kings: Etymology and Historical background”

சு.வெங்கடேசன்[1,*]

[1] முனைவர் பட்ட ஆய்வாளர்(முழுநேரம்), தமிழ்த்துறை, சென்னைக் கிறித்தவக் கல்லூரி, தாம்பரம், சென்னை- 600059.

***Corresponding author:** சு.வெங்கடேசன், venkatesan.sundram1996@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 1 November 2026
Revised: 5 November 2026
Accepted: 10 November 2026

Article ID
TIRJTS-2026-0050

Peer review
Double-blind peer review

Keywords
Thiyan
Uthiyan
Athiyan
Thiyan Othalan
Thithiyan
inscription.

ABSTRACT

In Tha Names Of Tha Kings Appearing in Sangam literature, Tha Name – Suffix ‘Thiyan’ Occupies a Significant Place. This Article aims to Examine The Etymological Structure, Grammar, and Historical background of The Word ‘Thiyan’ it Describes how The Term is Analysed Through Sangam literary Evidence Like Agananooru, Archaeological artifacts, and inscriptions. This study establishes That the term Was not Merely proper noun, but served as a symbol of a specific clan and an epithet associated With ruling Authority.

How to cite this article: சு.வெங்கடேசன் (2026). சங்க கால மன்னர் பெயர்களில் ‘தியன்’ என்னும் சொல்: சொல்லமைப்பும் வரலாற்றுப் பின்னணியும். *Tamilmanam – International Research Journal of Tamil Studies*, *12*(06), 572. https://doi.org/10.63300/tamilmanam.v12i06.32
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

ஆய்வு சுருக்கம்

சங்க இலக்கியங்களில் பயின்று வரும் மன்னர்களின் பெயர்களில் ‘தியன்’ என்னும் பெயர்க்கூறு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகிறது. இக்கட்டுரை ‘தியன்’ என்னும் சொல்லின் வேர்ச்சொல் அமைப்பு சொல்லிலக்கணம் மற்றும் அதன் வரலாற்றுப் பின்னணியை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அகநானூறு போன்ற சங்க இலக்கியச் சான்றுகள் அகழாய்வில் கிடைத்த தொல்பொருட்கள் மற்றும்

கல்வெட்டுகளில் 'தியன்' என்னும் சொல் எவ்வாறு ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது என்பதை விவரிக்கிறது. இச்சொல் வெறும் இயற்பெயர் மட்டுமின்றி ஒரு குறிப்பிட்ட குலத்தின் அடையாளமாகவும் ஆட்சி அதிகாரம் சார்ந்த அடைமொழியாகவும் விளங்கியதை இவ்வாய்வு நிறுவுகிறது.

கலைச் சொற்கள் : 1.தியன், 2.உதியன், 3.அத்தியன், 4.தியன் ஓதலன், 5.திதியன், 6. கல்வெட்டுகள்.

முன்னுரை:-

பண்டைய தமிழ்ச் சமூகத்தின் அரசியல், பண்பாடு மற்றும் வரலாற்று நிகழ்வுகளை அறிவதற்குச் சங்க இலக்கியங்களும் தொல்லியல் சான்றுகளும் முதன்மை ஆதாரங்களாகத் திகழ்கிறது. சங்க காலத்தில் மூவேந்தர்களான சேர சோழ பாண்டியர்களைத் தவிர்த்து பல்வேறு நிலப்பகுதிகளை ஆட்சி செய்த வேளிர்களும் குறுநில மன்னர்களும் மிக முக்கிய பங்காற்றியுள்ளனர். அவர்களின் பெயரமைப்புகளை ஆராயும்போது, பெயருக்கு முன்னரோ பின்னரோ சில குறிப்பிட்ட சொற்கள் குலப் பெயராகவும் பட்டப் பெயராகவும் பயின்றுவந்துள்ளதைக் காண முடிகிறது

அவ்வகையில் சங்க பாடல்களில் இடம்பெறும் உதியன், திதியன், அதியன் போன்ற மன்னர்களின் பெயர்களில் காணப்படும் 'தியன்' என்னும் சொல் சிறப்பான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இச்சொல் இயற்பெயரா குலப் பெயரா அல்லது ஆட்சி அதிகாரத்தைக் குறிக்கும் பெயரா என்பதில் வரலாற்று ஆசிரியர்களிடையேயும் மொழியியலாளர்களிடையேயும் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. குறிப்பாகச் சங்க காலத்தைச் சேர்ந்த மோதிரங்கள், பானை ஓடுகள், மற்றும் கல்வெட்டுகளிலும் 'தியன்' என்ற பெயர் கிடைத்துள்ளன. இச்சுழலில் 'தியன்' என்ற சொல் குறித்தும், அதன் வேர்ச்சொல் தோற்றம் மற்றும் அதன் வரலாற்றுப் பின்னணியைச் சங்க இலக்கியங்கள் மற்றும் தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் விரிவாக ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

தியன் சொல்லின் பொருள்

தியன் என்ற பெயரின் வேர்ச்சொல்லானது ' தி' அல்லது திய என்பதாகக் கருதப்படுகிறது. இப்பெயர் தி+ய்+அன்=தியன் எனப் புணர்கிறது. 'தியன்' என்ற பெயரானது ஒளிபொருந்தியவன், சூரியன், உயர்ந்தவன், வழிகாட்டுபவன் மற்றும் அறிவுடையோன் என்ற பொருள்களில் அமைந்துள்ளன.

சங்க இலக்கியத்தில் தியன் சொல் பயின்று வரும் இடங்கள்

சங்க காலத்தில் 'தியன்' என்ற பெயரில் தனி அரசன் ஒருவன் வாழ்ந்ததாகச் சங்க இலக்கியப் பதிவுகளில் நேரடி ஆதாரம் இல்லை. இருப்பினும் சங்க காலத்தில் மிகவும்

புகழ்பெற்ற சில மன்னர்களின் பெயர்களில் 'தியன்' என்ற சொல் அடைமொழியாக வருகின்றது.

உதியன்

சங்க காலத்து முதல் சேர் மன்னரான உதியஞ்சேரல் உதியன் என்று அழைக்கப்படுகிறான். இப்பெயரில் வரும் உதியன் என்னும் சொல் தியன் என்பதன் விரிவே ஆகும். உதி+அன் = உதியன் உதிக்கும் சூரியன் போன்ற பேரொளி மிக்க அரசனாக குறிப்பிடப்படுகிறன். இவ்வரசன் பற்றிப் இளங்கீரனார்,

"அரும் செயல் பொருட்பிணி முன்னி யாமே

சேறும் மடந்தை என்னவளின் தான் தன்

நெய்தல் உண்கண் பைல் தூரம்

பின் இரும் கூந்தல் மறையினள் பெரிது அழிந்து

உதியன் மண்டிய ஒலி தலை சார்பின்

இம்மென் பெரும் களத்து இவர் ஊதும்

ஆம்பல் அம் குழலின் ஏங்கிக்

கலக்கு அஞர் உறுவோள் புலம்பு கொள் நோக்ககே"(நற்.113;5-12)

என்று பாடுகிறார். இப்பாடலில் பொருள் ஈட்டவதற்காகத் தலைவியைப் பிரிந்து செல்வதைத் தலைவன் கூறுகிறான். இதனை அறிந்த தலைவி ஏங்கி அழுகிறாள். இதனை பார்பதற்கு உதியன் தனது படைகளுடன் எதிர்த்து நின்ற முழக்கம் நிறைந்த பெரும் போர்க்களத்தில் ஊதப்படுகின்ற ஆம்பல் குழல் போலத் ஏங்கி அழுவதாக இப்பாடல் அமைகிறது.

திதியன்

திதியன் என்ற சொல்லில் உள்ள 'திதி' என்பது நிலைத்திருத்தல் அல்லது காலத்தைக் குறிக்கும். இத்திதியன் மக்களைக் காக்கும் தலைவன் என்பதால் திதியன் என அழைக்கப்பட்டிருக்கலாம். திதியன் என்ற பெயரிலும் 'தியன்' என்ற அடைமொழி அமைந்துள்ளது. இவ்வரசன் சங்க கால வேளிர் மன்னர்களில் ஒருவராக அறியப்படுகிறான். திதியன் பொதிகை மலைக்கு உரியவன் என்பதை,

"வருவர் வாழி தோழி பொருநர்

செல் சமம் கடந்த வில் கெழு கணக்கைப்

நொதியின் செல்வன் பொலம் தேர்த் திதியன்

இன் இசை இடத்தின் இறங்கும்

கல் மிசை அருவிய காடு இறந்தோரே"(அகம்.25;18-22)

என்று ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் பாடிய அகநானூற்றுப் பாடல் வழி அறியமுடிகிறது. திதியன் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியனின் நண்பன் ஆவான். இம்மன்னன் தலையாலங்கானத்துப் போரில் பாண்டியன் நெடுஞ்செழியனை எதிர்த்துப் போரிட்ட ஐந்து குறுநில மன்னர்களில் ஒருவன். திதியன் மூவேந்தர்களுடன் நட்பு கொண்டிருந்தாலும் தனது நிலப்பரப்பின் ஆட்சியைப் காப்பதில் உறுதியாக இருந்தான்.

அதியன்

அதியன் என்னும் பெயர் 'அதி' என்ற வேர்ச்சொல்லில் இருந்து தோன்றியதாகும். 'அதி' என்பது உயர்ந்த, மேன்மையான என்ற பொருளைத் தருவதுடன், ஆற்றலிலும் கொடையிலும் பிறரை விட உயர்ந்தவன் என்பதால் 'அதியன்' என்று அழைக்கப்பட்டிருக்கலாம். இப்பெயருக்கு "**தமிழ் தமிழ் அகரமுதலியில் மேலானவன், கடையெழு வள்ளல்களில் ஒருவன், மேம்பட்டவன், பரம்பொருள், என்று குறிப்பிடப்படுகிறது**" 'அதியன்' பெயரில் வரும் 'தியன்' என்ற அடைமொழி தலைமைத்துவத்தைக் குறிக்கும் சொல் வடிவமாகும். சங்க காலத்தில் தகடூர் பகுதியை ஆண்ட மன்னன் அதியமான் நெடுமான் அஞ்சியைக் குறிக்கும் பெயரே இதுவாகும். சங்க இலக்கியத்தில் மாமூலனார் பாடிய அகநானூற்றுப் பாடலில் 'அதியன்' என்னும் சொல் பயின்று வருகிறது. இப்பாடல் அதியன் காலத்திற்குப் பிந்தைய வறட்சி நிலையைப் பற்றிக் கூறுகிறது. இதனை,

"ஆடுநடைப் பொலிந்த புகற்சியின் நாடு கோள்

அள்ளனைப் பணித்த அதியன் பின்றை

வள் உயிர் மாக் கிணை கண் அவிந்து ஆங்கு

மலை கவின் அழிந்த கனை கடற்று அரும் சுரம்

வெய்ய மற்ற நின்வை வயிறு உணீஇய

தண் மழை ஒரு நாள் தலைஇய ஒள்நுதல்"(அகம்.325;7-12)

என்ற அகநானூறு பாடல் எடுத்துரைக்கின்றன. வெற்றிப் புகழை உடைய அதியன் மறைந்த பிறகு பெரிய ஓசையுடைய கிணை என்னும் பறையின் முழக்கம் அடங்கிப் போனது போல, அதியன் வாழ்ந்த மலை அழகிழந்து வறண்டு போனதை இப்பாடல் காட்சிப்படுத்துகிறது.

சங்க கால மோதிரங்கள் மற்றும் பானை ஓடுகளில் தியன் பெயர்

சங்க காலத் தொல்பொருட்களான மோதிரங்கள் மற்றும் பானை ஓடுகளில் கண்டெடுக்கப்பட்ட 'தியன்' என்ற பெயர் நம் மொழியின் ஆழமான பண்பாட்டுப்

பரிமாணங்களை வெளிப்படுத்துகிறது. தியன் என்ற சொல் மோதிரம் மற்றும் பானை ஓடுகளில் தியன், தியன் ஓதலன், அந்தியன் போன்ற பெயர்கள் இடப்பட்டுள்ளன. கரூர் அமராவதி ஆற்றில் கிடைத்த இரண்டு தங்க மோதிரங்களில் 'தியன்' என்றும் 'தியன் ஓதலன்' என்றும் தமிழ் பிராமிய எழுத்துகளில் எழுதப்பட்டுள்ளது. இதன் காலம் கி.மு இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. குறிப்பாகச் சிங்கத்துடன் போரிடும் அரசனின் உருவம் பொறிக்கப்பட்ட மோதிரத்தில் 'தியன்' இடம் பெற்றுள்ளது.



(படம்:1) **தியன்** பெயர் கொண்ட தங்க மோதிரம்



மற்றோரு மோதிரத்தில் 'தியன் ஓதலன்' எனத் தமிழ் பிராமிய எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. இதன் காலம் கி.மு முதல் நூற்றாண்டு ஆகும்.

(படம்:2) **தியன் ஓதலன்** பெயர் கொண்ட தங்க மோதிரம்

இதனை **தியன் மகன் ஓதலன் எனப் பொருள் கொள்ளலாம் என ஆறுமுக சீதாராமன் சங்க கால மோதிரங்கள் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.** இம்மோதிரங்கள் 'தியன்' என்ற அரசன் வாழ்ந்ததற்கான சான்றுகளை வெளிப்படுத்துகின்றன. இதே போன்று கொடுமணல் அகழாய்வில் கிடைத்த பானை ஓடொன்றில்




(படம்:3) கொடுமணல் அகழாய்வு (**அந்தியன்**)

அந்தியன் என்ற பெயர் அமைந்துள்ளது. இதன் காலம் கி.மு இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.

சங்க கால கல்வெட்டுகளில் தியன் பெயர்கள்

தமிழ் பிராமிக் கல்வெட்டுகளில் 'தியன்' என்ற பெயர் பல வடிவங்களில் இடம்பெற்றுள்ளது. இது சங்க கால சமூகத்தில் இப்பெயரின் பரவலான பயன்பாட்டைக் காட்டுகிறது. குறிப்பாக அழகர்மலை கல்வெட்டில் 'தியன் சந்தன்' என்று தமிழ் பிராமிய எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.




(படம்:4) **தியன்** சந்தன் அழகர்மலை கல்வெட்டு

இதன் காலம் கி.மு.முதல் நூற்றாண்டு ஆகும். இதேபோல் புலிமான் கோம்பையில் கண்டெடுக்கப்பட்ட நடுகல்லில்



(படம்:5) புலிமான் கோம்பை நடுகல் (கல் பேடு **தீயன் அந்துவன்** கூடல் ஊர் ஆகோள்)


கல் பேடு தியன் அந்துவன் கூடல் ஊர் ஆகோள் என்று எழுதப் பட்டுள்ளது. ஆநிரைகளைக் கவரும் போது போரில் வீரமரணம் அடைந்த 'தியன் அந்துவன்' என்ற வீரனுக்கு எடுக்கப்பட்ட நடுகல் இதுவாகும். இந்நடுகல்லில் 'தியன்' என்பதில் வரும் 'தி' என்ற எழுத்து 'தீ' எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. இதன் காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு. சங்க இலக்கியத்தில் அந்துவன் சேர அரசராக அறியப்படுகிறார்.



ஆப்பனூரில் கிடைத்த நடுகல்லில் "ஆப்பனூர் எறி மண்டு விழுந்த அத்தியன் கீரன்" எனக் கல்வெட்டு அமைந்துள்ளது.

(படம்:6) ஆப்பனூர் நடுகல் (ஆப்பனூர் எறி மண்டு விழுந்த **அத்தியன்** கீரன்

இக்கல்வெட்டு கி.மு. இரண்டாம் நூற்றாண்டுச் சேர்ந்து. அந்த நடுகல்லில் ஆப்பனூரைக் காக்கும் போது மாண்ட கீரன் என்ற வீரனைக் கௌரவிக்க நடப்பட்டது. இதில் அத்தியன் என்பது தந்தை பெயராகவும் கீரன் என்பது அந்த வீரனின் பெயராகவும் கருதப்படுகிறது.



ஜம்பைக் கல்வெட்டில் ஸதியபுதோ அதியந் நெடுமான் அஞ்சி என்று தமிழ் பிராமி எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. இதன் காலம் கி.மு. முதல் நூற்றாண்டு ஆகும்.

.

(படம்:7) ஜம்பைக் கல்வெட்டு (அதியன்)

இதில் ஸதியபுத்திரன் அதியன் நெடுமான் அஞ்சி கொடையாக அளித்த பள்ளி குறிப்பிடப்படுகிறது. இக்கல்வெட்டில் அதியன் என்ற சொல் இடம்பெற்றுள்ளது.

இலங்கை நாக குலத்தவர் பற்றிய ஹிபவுவ கல்வெட்டில் "உதியஹ அயக பருமக நாக குலஹ லேனே சகச" என்று அமைந்துள்ளது.




நாக குலத்தவர் பற்றிக் கூறும் ஹிபவுவ கல்வெட்டின் பிரதி

(படம்:8) உதியன் கல்வெட்டு

இதன் பொருள் உதியன் என்ற அரசன் நாக குலத்தவரின் சங்கத்தாருக்கு இக்குகையை வழங்கினான் என்பதாகும். இதே போன்று மற்றோரு கல்வெட்டில்

நாகஹ.....லேனே உபசக உதியலேனே என்று எழுதப்பட்டுள்ளது.



(படம்:9) உதியன் மற்றும் நாகன் கல்வெட்டு

இதில் நாகவின் குகை என்று உதியன் குகை என்று குறிப்பிடப் பட்டுள்ளது. உதியன் கி.மு.267 முதல் கி.மு 257 வரை ஆட்சி செய்துள்ளான். இவர் இலங்கையை ஆண்ட மூத்தசிவனின் மகன் ஆவார். சங்க இலக்கியத்தில் குறிப்பிட்ப்படும் உதியன் சேரலாதனும் இலங்கை அரசன் உதியனும் ஒருவரா என்பது மேலும் ஆராய்ச்சிக்குரியதாகும்.

இக்கல்வெட்டுகளில் வரும் 'தியன்' என்ற பெயர் தனிப்பட்ட நபர்களின் அடையாளமாகவும் குடும்பப் பெயரின் தொடர்ச்சியாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை இச்சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

தியன் பெயர்கள்

- தியன்
- தி**தியன்**
- உ**தியன்**

- அ**தியன்**
- **தீயன்** அந்துவன் (தியன்)
- அந்்**தியன்**
- **தியன்** ஓதலன்
- **தியன்** சந்தன்
- அத்**தியன்** கீரன்

எனப் தியன் பெயர்கள் அமைகிறது.

முடிவுரை:-

சங்க இலக்கியங்கள், அகழாய்வில் கிடைத்த பானை ஓடுகள் மற்றும் தங்க மோதிரங்கள், தமிழ் பிராமிய கல்வெட்டுகள் ஆகியவற்றின் துணைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வின் மூலம் 'தியன்' என்ற சொல் தமிழ் வரலாற்றில் வகித்த முக்கிய பங்கு தெளிவாகிறது.

சொல்லமைப்பும் பொருளும்: 'தி' அல்லது 'திய' என்ற வேர்ச்சொல்லிலிருந்து பிறந்த இச்சொல் ஒளிபொருந்தியவன், உயர்ந்தவன், தலைமைத்துவம் கொண்டவன் என்ற உயர் பொருளில் ஆளப்பட்டுள்ளது.

இலக்கியச் சான்றுகள்:- தனி அரசனின் பெயராக மட்டுமின்றி உதியன், திதியன், அதியன் போன்ற புகழ்பெற்ற மன்னர்களின் பெயர்களோடு அடைமொழியாகவும் குலப் பெயராகவும் இணைந்திருப்பதைச் சங்கப் பாடல்கள் உறுதிசெய்கின்றன.

தொல்லியல் மற்றும் கல்வெட்டு ஆதாரங்கள்: கரூர் தங்க மோதிரங்கள், கொடுமணல் பானை ஓடுகள், அழகர்மலை, புலிமான் கொம்பை, ஆப்பனூர், ஜம்பை மற்றும் இலங்கை கல்வெட்டுகள் வாயிலாக இச்சொல் மன்னர்கள் மற்றும் அரச அடையாளமாகவும் கி.மு.மூன்றாம் நூற்றாண்டு முதலே பரவலாகப் பயன்பாட்டில் இருந்துள்ளதை அறிய முடிகிறது.

'தியன்' என்னும் சொல் வெறும் இயற்பெயர் என்ற எல்லையைத் தாண்டி பண்டைய தமிழர்களின் ஆட்சி அதிகாரம் குலப் பெருமை மற்றும் மொழியியல் தொன்மை ஆகியவற்றை இணைத்துக் காட்டும் ஒரு முதன்மையான வரலாற்றுச் சான்றாகத் திகழ்கிறது என்பதில் ஐயமில்லை.

துணை நூற்பட்டியல்

References

வையாபுரிப் பிள்ளை.எஸ்., சங்க இலக்கியம் முழுவதும்(பாட்டும் தொகையும்), பாரி நிலையம், 90, பிராட்வே, சென்னை-600 108

சண்முகம் பிள்ளை.மு., தமிழ் – தமிழ் அகரமுதலி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைச் சாலை, சி.ஐ.டி வளாகம் தரமணி, சென்னை- 600113

ராஜன்.கா., தென்மைத் தமிழ் எழுத்தியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைச் சாலை, சி.ஐ.டி வளாகம் தரமணி, சென்னை-600113

ஆறுமுக சீதாராமன். சங்க கால மோதிரங்கள், தனலட்சுமி பதிப்பகம், 12,ராஜ ராஜன் நகர் மானோஜிப்பட்டி(தெற்கு), தஞ்சாவூர்- 613004.

தமிழ் – பிராமி கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை, சென்னை – 600008.

பத்மநாபன்.சி., இலங்கை தமிழ்ச் சாசனங்கள், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 246,1/1,காலி வீதி, கொழும்பு – 04.